## எட்டாம் வகுப்பு தமிழ் & நாயக்கர் காலம்

1. பின்வருவனவற்றில் எது / எவை சரி (சிற்றிலக்கியம்)
I. 'காப்பியங்களும்'., 'புராணங்களும்' - தோன்ற வில்லை
II. பள்ளு, உலா, தூது, கலம்பகம் முதலியவை தோற்றம்
III. வீரமாமுனிவர் அகராதி 'பிரபந்தம் 96' கூறியுள்ளார்
IV. 'பிரபந்தம்' - நன்கு கட்டப்பட்டது என்பது பொருள்
[A] I, III [B] II, IV
[C] II, III, IV [D] I, II, III, IV

2. கி.பி.1538 -ல் "முகமதியர்கள்"- ளை வென்று மதுரையில் நாயக்க அரசுக்கு அடிகோலியவர் யார் ?
[A] சோழர்கள் [B] களப்பிரர்கள்
[C] பாண்டியநெடுஞ்செழியன் [D] குமாரகம்பண்ணன்

3. "விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"
[A] தொல்காப்பிய சூத்திரம்
[B] பன்னிரு பாட்டியல் சூத்திரம்
[C] இலக்கண விளக்கப்பாட்டியல் சூத்திரம்
[D] தொன்னூல் விளக்கப்பாட்டியல் சூத்திரம்

4. "பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு என்னும் தொகையாம்" எந்த நூலில் கூறப்பட்டுள்ளது ?
[A] வெண்பாப்பாட்டியல் [B] நவநீதப்பாட்டியல்
[C] பிரபந்தமரபியல் [D] சிதம்பரப்பாட்டியல்

5. "தூது இருவகைப்படும்" - புறநானூற்றில் கூறப்பட்டுள்ள அதியமான் சார்பாக தொண்டைமானிடம் தூது சென்றது "ஔவையார்" - எவ்வகைத் தூது ?
[A] அகத்தூது [B] புறத்தூது
[C] அகத்தூது (ம) புறத்தூது [D] எதுவும்இல்லை

6. பிள்ளைத்தமிழ் ........................................ வகைப்படும்
[A] ஏழு [B] பத்து
[C] இரண்டு [D] மூன்று

7. பின்வருவனவற்றுள் பொருத்தமல்லாதைத் தேர்க
[A] நெஞ்சுவிடுதூது - உமாபதி சிவாச்சாரியார்
[B] அழகர் கிள்ளை விடுதூது - சொக்கநாதப்புலவர்
[C] கூளப்பநாயக்கன் காதல் - சுப்ரதீபகவிராயர்
[D] விறலிவிடுதூது - அமிர்தம் பிள்ளை

8. ஒரு பாடலடியின் ஈற்றடி சொல், அசை, சீர், எழுத்து ஆகியவற்றில் ஓன்று அடுத்த பாடல் அல்லது அடியின் தொடக்கமாக வரப்பாடுவது ?
[A] தூது [B] அந்தாதி
[C] பிள்ளைத்தமிழ் [D] கலம்பகம்

9. "மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே" - ஏற்றப்பாட்டான இப்பாடல் இடம்பெற்றது ________________ ?
[A] தாலாட்டுப்பாடல் [B] பிள்ளைத்தமிழ்
[C] வேலைப்பாடல் [D] தனியந்தாதி

10. குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தோராம் திங்கள் வரை ஒரு பருவத்திற்கு ________________ என வகுத்துப்பாடுவது பிள்ளைத்தமிழ் ?
[A] ஒரு திங்கள் [B] இரண்டு திங்கள்
[C] மூன்று திங்கள் [D] நான்கு திங்கள்

11. பிள்ளைத்தமிழில் குழந்தையின் 15 ஆம் மாதத்தில் பாடப்படும் பருவம் எது ?
[A] செங்கீரை [B] சப்பாணி
[C] வருகை [D] அம்புலி

12. பின்வரும் பிள்ளைத்தமிழ் பாடியோர்களில் தவறானது
1. குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் - ஒட்டக்கூத்தர்
2. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர்
3. காந்தியம்மைப்பிள்ளைத்தமிழ் - அழகியசொக்கநாதர்
4. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - உ.வே.சாமிநாதர்
[A] 1 [B] 2
[C] 3 [D] 4

13. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் குறித்து தவறானது ?
[I] திருமலை நாயக்கர் முன்னிலையில் அரங்கேற்றம்
[II] வாரணைப்பருவத்தில் காணப்படுகிறது
[III] மீனாட்சியம்மை முன்னிலையில் அரங்கேற்றம்
[IV] அர்ச்சகர் மகள் வடிவில் வந்தது மீனாட்சியம்மை
[A] I [B] II
[C] III [D] IV

14. சங்க இலக்கியத்தில் அந்தாதிதொடையில் பாடப்பட்டது
[A] நற்றிணை [B] குறுந்தொகை
[C] ஐங்குறுநூறு [D] கலித்தொகை

15. சாம, பேத, தான, தண்டம் என நான்கு வழிகளில் பாடப்படும் பிள்ளைப் பருவம் எது ?
[A] சப்பாணி [B] முத்தம்
[C] வாரானை [D] அம்புலி

16. கலம்பகத்துக்கு ________________
[A] இளம் சூரியர், முதுசூரியர் [B] புகழேந்தி
[C] ஒட்டக்கூத்தர் [D] கம்பர்

17. "குறவஞ்சி" நாடகம் தோன்றிய காலம்
[A] பல்லவர்காலம் [B] காப்பியகாலம்
[C] சங்ககாலம் [D] நாயக்கர்காலம்

18. குறவர் வாழ்வைச் சித்தரிப்பது 'குறம்'பள்ளர் வாழ்வை சித்தரிப்பது (பள்ளு)________________
[A] வஞ்சிநெடும்பாட்டு [B] உழத்திப்பாட்டு
[C] தூது [D] வேளான்வேதம்

19. "சிந்தும் விருத்தமும்" விரவி வரப் பாடப்படுவது
[A] பள்ளு [B] பாஞ்சாலிசபதம்
[C] கலிங்கத்துப்பரணி [D] கம்பராமாயணம்

20. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழுக்கு அடுத்து வைத்துப் போற்றப்படுவது ________________
[A] காந்தியம்மைப் பிள்ளைத்தமிழ்
[B] சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
[C] முத்துகுமாரசாமிப் பிள்ளைத்தமிழ்
[D] முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ்

21. காந்தியம்மைப் பிள்ளைத்தமிழ் சிறப்புறப் பாடியதற்காக வள்ளல் "முத்துசாமி" வைரக்கடுக்கனை யாருக்கு பரிசளித்து மகிழ்ந்தார் ?
[A] பலபட்டடை சொக்கநாதப்புலவர்
[B] அழகிய சொக்கநாதப்புலவர்
[C] மீனாட்சி சுந்தரம் பிள்ளை
[D] 'தெய்வக்கவி' குமரகுருபரர்

22. பல்வகை வண்ணமும், மணமும் கொண்ட மலர்களால் கட்டப்பட்டக் கதம்பம் போன்றது ?
[A] மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
[B] கலம்பகம்
[C] காந்தியம்மை பிள்ளைத்தமிழ் [D] சிற்றிலக்கியம்

23. கலம்பகத்தில் இடம்பெற்ற செய்யுள் தவறான இணை
[A] கடவுளுக்கு - நூற்றொன்று பாடல்கள்
[B] முனிவர்க்கு - தொண்ணூற்று ஐந்து பாடல்கள்
[C] அரசருக்கு - தொண்ணூறு பாடல்கள்
[D] காளிக்கு - முப்பது பாடல்கள்

24. கலம்பக இலக்கியத்தில் காலத்தால் முற்பட்டது ?
[A] நந்திக்கலம்பகம்
[B] திருவரங்கக் கலம்பகம்
[C] மதுரைக் கலம்பகம்
[D] திருக்காவலூர் கலம்பகம்

25. தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மனைப் பாராட்டிப் போற்றப்படும் கலம்பகம் ?
[A] நந்திக்கலம்பகம்
[B] திருவரங்கக் கலம்பகம்
[C] மதுரைக் கலம்பகம்
[D] திருக்காவலூர் கலம்பகம்

ARIVU TRUST

**26.** "அஷ்டபிரபந்தம் கற்றவன் அரைப்பண்டிதன்" பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் 'அஷ்டம்' என்று கூறுவது
[A] 5 நூல்கள் [B] 8 நூல்கள்
[C] 10 நூல்கள் [D] 18 நூல்கள்

**27.** தஞ்சை சரபோஜி மன்னரின் அரசவைப் புலவராக திகழ்ந்தவர் ?
[A] குனங்குடியான் அப்துல் சாகிபு
[B] கொட்டையூர் சிவகொழுந்து தேசிகர்
[C] வசந்தவல்லி என்னும் வஞ்சிக்கொடி
[D] வெண்பாப்புலவர் புகழேந்திப்புலவர்

**28.** "அஷ்டக்கொடி குறவஞ்சி" - நாடகம் எந்தக்கோவிலில் நடைபெறுகிறது ?
[A] காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில்
[B] மதுரை மீனாட்சியம்மை கோவில்
[C] தஞ்சைப் பெரிய கோவில்
[D] ராமேஸ்வரம் சோமநாதர் ஆலயம்

**29.** குறவர் வாழ்வைச் சித்தரிப்பது 'குறம்' ஆனது போல பள்ளர் வாழ்வை சித்தரிப்பது 'பள்ளு' இலக்கியமாயிற்று இது எந்த நில நூலாகக் கருதப்படுகிறது ?
[A] குறிஞ்சி [B] மருதம்
[C] முல்லை [D] நெய்தல்

**30.** பொருத்துக :
(1) உழத்திப்பாட்டு - 18 உறுப்புகள்
(2) வேளாண்வேதம் - நாலடியார்
(3) நளோபாக்கியானம் - நளன் 'வரலாறு'
(4) கலம்பகம் - முக்கூடற்பள்ளு
[A] 4 3 1 2 [B] 2 1 3 4
[C] 4 2 3 1 [D] 1 2 3 4

**31.** பின்வரும் இணைகளில் தவறாக பொருத்தப்பட்டுள்ளது
[A] 'வெண்பாவிற்கு' - குமரகுருபரர்
[B] 'பொன் விளைந்த களத்தூர்' - புகழேந்தி
[C] 'சந்திரன் சுவர்க்கி' - புகழேந்தி
[D] 'நளவெண்பா' - மூன்று காண்டம்

**32.** "குட்டித்திருவாகசம்" - என்று அழைக்கப்படுவது ?
[A] நைடதம் (அ) நறுந்தொகை
[B] திருவிளையாடற்புராணம்
[C] திருக்கருவைப் பதிற்றுப்பத்து அந்தாதி
[D] 'முனைப்பாடியாரின்' அறநெறிச்சாரம்

**33.** "சைவர்களின் இரு கண்கள்"
[A] சிலப்பதிகாரம், மணிமேகலை
[B] திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற்புராணம்
[C] திருவிளையாடற்புராணம், திருப்பாவை
[D] பெரியபுராணம், கம்பராமாயணம்

**34.** திருத்தொண்டர் புராணம், திருவிளையாடற்புராணம் எந்த இரு நாட்டிற்கு பெருமை சேர்ப்பவையாக உள்ளது ?
[A] சேரநாடு, சோழநாடு
[B] சேரநாடு, பல்லவநாடு
[C] சோழநாடு, பாண்டியநாடு
[D] சேரநாடு, பாண்டியநாடு

**35.** பின்வரும் "நூல்களை" - படைத்தருளாதவர்கள் யார் ?
[A] வில்லிபாரதம் - வில்லிபுத்தூரார்
[B] அரிச்சந்திர புராணம் - வீரகவிராயர்
[C] திருப்பாதிரிப் புலியூர் கலம்பகம்- தத்துவப்பிரகாசர்
[D] சகலகலா வல்லி மாலை - குமரகுருபரர்

**36.** "வரதன்" - என்னும் இயற்பெயர் கொண்டவர் யார் ? "ஆசுகவி பாடுவதிலும்" வசை பாடுவதிலும் சிறந்தவர்"
[A] தாயுமானவர்
[B] இளஞ்சூரியர் - முதுசூரியர்
[C] அந்தக்கவி - 'வீரராகவர்'
[D] காளமேகப்புலவர்
.. ... ...

**37.** "சீட்டுக்கவி" எழுதுவதில் சிறந்து விளங்கியவர் யார் ?
[A] தாயுமானவர்
[B] இளஞ்சூரியர் முதுசூரியர்
[C] அந்தக்கவி 'வீரராகவர்'
[D] 'கவி' காளமேகப்புலவர்

**38.** "கற்பனைக்களஞ்சியம்"
[A] பிரபுலிங்கலீலை [B] நீரோட்டயமக அந்தாதி
[C] நால்வர் மணிமாலை [D] திருவாரூர் உலா

**39.** சைவசமயக்குரவர்களான அப்பர், சம்மந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் புகழை சிறபிப்பது
[A] பிரபுலிங்கலீலை [B] நீரோட்டயமக அந்தாதி
[C] நால்வர் மணிமாலை [D] திருவாரூர் உலா

**40.** "பிள்ளை பெருமாள் ஐயங்கார்" பற்றி தவறானது ?
[A] அழகிய மணவாளதாசர் என்று அறியப்படுகிறார்
[B] தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு நன்கு அறிந்தவர்
[C] அஷ்டபிரபந்தம் எனும் 8 நூலை இயற்றியவர்
[D] "திவ்வியக்கவி" என்றும் சிறப்பிக்கப்பட்டவர்

**41.** "சுவாமி விபுலானந்தர்" - பற்றி தவறானதைத் தேர்க
[I] ஈழ நாட்டில் மட்டகளப்பில் காரை தீவில் பிறப்பு
[II] இயற்பெயர் மயில்வாகனன்
[III] இராமகிருட்டினமடம் "விபுலானந்தர்" சிறப்பு பெயர்
[IV] 'மதங்க சூளாமணி' 'யாழ்' ஆராய்ச்சி நூலாகும்
[A] I [B] II [C] III [D] IV

**42.** பொருத்துக :
[A] இராமநாடகம் - படிக்காசுப்புலவர்
[B] சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - சிவப்பிரகாசர்
[C] வேலூர் கலம்பகம் - மீனாட்சிசுந்தரம்
[D] பிரபுலிங்கலீலை -அருணாச்சலகவிராயர்
[A] 2 1 4 3
[B] 4 2 3 1
[C] 2 3 4 1
[D] 4 3 1 2

**43.** இராமநாடகத்தை கீர்த்தனையாக பாடி தந்தவர் யார் ?
[A] அருணாச்சலக்கவிராயர்
[B] கோபாலகிருஷ்ண பாரதியார்
[C] மீனாட்சி சுந்தரம் பிள்ளை
[D] நல்லாப்பிள்ளை

**44.** "மீனாட்சி சுந்தரம் பிரபந்தத் திரட்டு" இவர் இயற்றிய அனைத்து நூல்களையும் திரட்டி வெளியிட்டவர் யார் ?
[A] உ.வே.சா [B] கோபாலகிருஷ்ண பாரதி
[C] அருணாச்சலகவிராயர் [D] சிவஞானமுனிவர்

**45.** பொருத்துக :
[A] கோயில் நான்மணிமாலை - வள்ளலார்
[B] திருவருட்பா - உமாபதி சிவாச்சாரி
[C] இருபா இருபது - பட்டினத்தார்
[D] கொடிக்கவி - அருள்நந்தி சிவாச்சாரி
[A] 2 1 4 3 [B] 3 1 4 2
[C] 2 1 4 3 [D] 3 4 2 1

**46.** கண்ணி, கும்மி, கீர்த்தனை, முதலிய பாடல்கள் மூலம் தன் பக்தியை வெளிப்படுத்தியவர் யார் ?
[A] இராமலிங்கஅடிகள் [B] திருத்தக்கதேவர்
[C] சுவாமி விபுலானந்தர் [D] மாணிக்கவாசகர்

**47.** "சமய மறுமலர்ச்சியாளர்" சிறந்த சீர்திருத்தவாதியாகவும் தன்னை அடையாலபடுத்திக்கொண்டவர் யார் ?
[A] பாரதிதாசன் [B] வள்ளலார்
[C] தேவர் [D] பாரதியார்

**48.** பின்வரும் நூல் நூலாசிரியர்களில் தவறான இணை ?
[A] திருக்களிற்றுப்பாடியர் - திருக்கடவூர்உய்யவந்ததேவர்
[B] திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்ததேவர்
[C] சிவஞானபோதம் - மெய்கண்ட தேவர்
[D] திருவருட்பயன் - அருள் நந்தி சிவாச்சாரியார்

ARIVU TRUST

**49.** "அம்பலப்பாட்டே அருட்பாட்டு அல்லாதார் பாட்டெல்லாம் மருட்பாட்டு" - இவ்வரியை பாடி அருளியவர் யார் ?
[A] ஆறுமுகநாவலர் [B] வில்லிபுத்தூரார்
[C] வள்ளலார் [D] தாயுமானவர்

**50.** பின்வருவனவற்றுள் சொற்றொடரில் அமைத்து எழுதுக
[A] கற்றவர்க்கும் கல்லார்க்கும் களிப்பரளும் களிப்பே
[B] கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பரளும் களிப்பே
[C] களிப்பே களிப்பருளும் கற்றவர்க்கும் கல்லார்க்கும்
[D] கல்லார்க்கும் களிப்பே கற்றவர்க்கும் களிப்பருளும்

**51.** 'பின்வருவனவற்றுள் ஒரு சொல் பொருளில் தவறானது
[A] பேசு - பிள்ளை, குழவி, மகவு, சேய்
[B] மிகுதி - சால, தவ, நனி, கூர், கழி
[C] சூரியன் - ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன்
[D] உலகம் - புவி, தரணி, நானிலம், பார், வையம்

**52.** பொருத்துக :
[a] கதை சொன்னான் (1) உம்மைத்தொகை
[b] வீட்டிலிருந்து பார்த்தான் (2) ஐந்தாம் வேற்றுமை
[c] சுடுசோறு (3) இரண்டாம் வேற்றுமை
[d] கல்விகேள்வி (4) வினைத்தொகை
[A] 3 2 4 1 [B] 3 4 2 1
[C] 3 4 1 2 [D] 3 4 1 2

**53.** கீழ்கண்டவற்றுள் பொருத்தமற்றது
[A] அடிசில் [B] அமலை
[C] கழனி [D] மூரல்

**54.** "வளைகதிர் வல்சிகொண் டளைமல்க" நூலைத் தேர்க
[A] புறநானூறு [B] நாலடியார்
[C] சீவகசிந்தாமணி [D] மலைபடுகடாம்

**55.** களிஇன்ப நல்வாழ்வு கொண்டு - கன்னித்தமிழுக்கு ஆற்றுக தொண்டு !
இப்பாடல் வரியுடன் தொடர்புடையவர் யார் ?
[A] பாரதிதாசன் [B] சச்சிதானந்தன்
[C] தாராபாரதி [D] அப்துல் லத்தீப்

**56.** "மாவீரன் நெப்போலியன்" - எந்த நாட்டைச்சேர்ந்தவர் ?
[A] அமெரிக்கா [B] ஆஸ்திரியா
[C] பிரெஞ்சு [D] இலத்தீன்

**57.** 'தேகம்' எனவும் 'யாக்கை' எனவும் குறிப்பிடப்படும் சொல்லின் பொருள் யாது ?
[A] உயிர் [B] உடல்
[C] எலும்பு [D] ஆவி

**58.** "பெற்ற தாய்தனை மகமரந் தாலும் ;
பிள்ளை யைப்பெருந் தாய்மறந் தாலும்"
[A] இராமலிங்க அடிகளார் (வள்ளலார்)
[B] மறைமலை அடிகள் (வேதாசலம்)
[C] நீலாம்பிகை அம்மையார் (கருப்பாயி)
[D] திரு.வி.கல்யாணசுந்தரம்

**59.** பின்வருவனவற்றுள் எது / எவை தவறு ?
I. மறைமலையடிகள் மகள் நீலாம்பிகை ஆவார்
II. தந்தையிடம் தமிழ், இசை, நடனம், பரதம் பயின்றார்
III. பதினைந்து வயதில் மேடையேறிச் சொற்பொழிவு
IV. நீலாம்பிகை தந்தையை குருவாக ஏற்றுக்கொண்டார்
[A] I மற்றும் III [B] II மற்றும் IV
[C] II மற்றும் III [D] I மற்றும் IV

**60.** வாழ்க செந்தமிழ் = (வாழ்க + செந்தமிழ்) - இதில் இடம்பெற்றுள்ள இலக்கணம் காண்க ?
[A] உயர்வு சிறப்பும்மை, பண்புத்தொகை
[B] இழிவு சிறப்பும்மை, உயர்வு சிறப்பும்மை
[C] அடுக்குத்தொடர், பண்புத்தொகை
[D] வியங்கோள் வினைமுற்று, பண்புத்தொகை

**61.** அரபு எண்ணுடன் பொருந்தாத தமிழெண்ணை காண்க
[A] கக - 11 [B] உஉ - 22
[C] கஉ - 17 [D] ருரு - 55

**62.** 'முள்ளை' - முட்டாள் என்று வர்ணித்தவர் யார் ?
[A] வள்ளல் மருதப்பர் [B] அண்ணாமலையார்
[C] மு.வரதராசன் [D] அண்ணா

**63.** "உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" எனும் நன்னூல் விதிப்படி புனராதது எது ?
[A] மலர் + அடி = மலரடி
[B] கனல் + எரி = கனலெரி
[C] கடல் + ஓரம் = கடலோரம்
[D] செம்மை + மொழி = செம்மொழி

**64.** பாவாணர், சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குனராக பணியில் சேர்ந்த ஆண்டு ?
[A] 1974 [B] 1981 [C] 1927 [D] 1979

**65.** மதுரையில் 05.01.1981 அன்று நடைபெற்ற ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டில் எத்தலைப்பில் "பாவாணர்" சொற்பொழிவாற்றினார் (**5 th World Tamil Conference**)
[A] மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்
[B] பண்டையத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்
[C] திருவள்ளுவரும் திருக்குறள் மரபுரையும்
[D] தமிழர் திருமணமும் பண்பாடுகளும்

**66.** கீழ்கண்டவற்றுள் "தேவநேயப்பாவாணர்" பற்றி தவறானது
I. பிறப்பு 07.02.1902 இறப்பு 15.01.1981 சங்கரன்கோவில்
II. தமிழ்ப்பெருங்காவலர் உட்பட 174 சிறப்புப்பெயர்
III. மதுரை உலக தமிழ்மாநாட்டில் பங்கேற்பு 05.01.1981
IV. பாவாணர் கோட்டம், சிலை, நூலகம் 'முறம்பு'
[A] I மற்றும் IV [B] I மற்றும் III
[C] I மட்டும் [D] எதுவுமில்லை

**67.** கவியரசு, முடியரசன் (எ) துரைராசு அவர்களின் எந்த காவியத்துக்காக 1966 - ல் தமிழகஅரசு பரிசுபெற்றது
[A] காவியப்பாவை [B] பூங்கொடி
[C] முடியரசன் கவிதைகள் [D] வீரகாவியம்

**68.** பொருத்துக :
[a] கட்டுச்சோறு (1) கெடுதல் விகாரம்
[b] கண்மலர் (2) தோன்றல் விகாரம்
[c] வளநூல் (3) இயல்பு விகாரம்
[d] முட்செடி (4) தோன்றம் விகாரம்
[A] 2 3 4 1 [B] 3 4 2 1
[C] 3 4 1 2 [D] 3 2 4 1

**69.** பத்துப்பருவம் கொண்ட "வில்லிபாரதம்" ______________
[A] 4350 விருத்தப்பாக்கள்
[B] 4350 வெண்பாக்கள்
[C] 4350 ஆசிரியப்பாவால்
[D] 4350 களிப்பாவால்

**70.** "ஊன்பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும் உணர்வுடன் நின் திருநாமம் உரைக்கப்பெற்றேன்" - பாடியபுலவர் நூல்
[A] வள்ளலார், திருவருட்பா
[B] கம்பர், கம்பராமாயணம்
[C] வில்லிபுத்தூரார், வில்லிபாரதம்
[D] ஆண்டாள், திருப்பாவை

**71.** வானூர்தி ஒட்டுகிறவனைத் தமிழில் எவ்வாறு அழைக்கலாம் ______________
[A] ஓட்டுனர் [B] ட்ரைவர்
[C] யவனர் [D] வலவன்

**72.** நிலத்தையும் கடலையும் மட்டுமல்லாமல் நீல வானத்தையும் ஆளுமை செய்தவர்கள் யார் ?
[A] தமிழர்கள் [B] கிரேக்கர்கள்
[C] ரோமானியர்கள் [D] எகிப்தியர்கள்

**73.** "இறைவன் திருவருளைப் பெறுவதற்காகப் பாடிய பாடல், "இறைவனின் திருவருளால் பாடிய பாடல்" எது ?
[A] திருப்பாவை [B] திருக்குறள்
[C] திருமந்திரம் [D] திருவருட்பா

ARIVU TRUST

**74.** நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம் பகலும்பாற் பட்டன் றிருள்" அடிகோடிட்டவைக்கு பொருள்
[A] சிரித்துமகிழ்பவர் [B] சிந்தித்துசெயல்படுபவர்
[C] மிகப்பெரிய உலகம் [D] நன்னெறியுடையவர்

**75.** கருவி, கருத்தா ஆகிய இருபொருள்களிலும் வருவது ?
[A] முதல்வேற்றுமை [B] இரண்டாம் வேற்றுமை
[C] மூன்றாம் வேற்றுமை [D] நான்காம் வேற்றுமை

**76.** பின்வருவனவற்றுள் தவறானதைத் தேர்க
[A] இந்தியாவில் வனவிலங்கு பாதுகாப்பு இடம் 17
[B] தேசிய வனவிலங்கு பூங்காக்கள் 66
[C] வனவிலங்கு புகலிடங்கள் 368
[D] இந்தியாவில் 1/18% காடுகள் உள்ளன

**77.** "தந்தை பெரியாரின்" - பகுத்தறிவுச் சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்தவர் யார் ?
[A] வாணிதாசன் [B] முடியரசன்
[C] பாரதியார் [D] பாரதிதாசன்

**78.** பின்வருவனவற்றுள் பொருந்தாத இணை எது ?
[A] வெற்றிலை நட்டான் - தொழிலாகுபெயர்
[B] வெள்ளை அடித்தான் - பண்பாகு பெயர்
[C] பொங்கல் உண்டான் - தொழிலாகுபெயர்
[D] மல்லிகை பூ - முதலாகுபெயர்

**79.** தற்போதைய உத்திரபிரதேச மாநிலத்தில் பாயும் சரயு நதியின் வளம் கம்பராமாயணம், காண்டத்தில் உள்ளது
[A] பாலகாண்டம் [B] அயோத்தியாகாண்டம்
[C] ஆரணியகாண்டம் [D] சுந்தரகாண்டம்

**80.** ஔவையாரிலிருந்து இந்தக்கால இந்திராகாந்தி, கல்பனா சாவ்லா முதலிய மாதரசிகள் ____________________
[A] உலகின் தலை சிறந்தவர்கள்
[B] கல்வியால் உயர்ந்தவர்கள்
[C] மாதர்குல திலகங்கள்
[D] வரலாற்றில் (சரித்திரத்தில்) இடம்பிடித்தவர்கள்

**81.** பொருத்துக :
[A] மறைவழி (1) சுந்தரம் பிள்ளை
[B] மனோகரா (2) காசி விஸ்வநாதர்
[C] மனோன்மணீயம் (3) லார்ட் லிட்டன்
[D] டம்பாச்சாரி விலாசம் (4) பம்மல் சம்மந்தம்
[A] 1 3 2 4 [B] 3 1 4 2
[C] 3 4 1 2 [D] 1 2 3 4

**82.** செல்வக்குடியில் பிறந்த ஒருவன், ஒழுக்கங்கெட்டு, நோயும் வறுமையும் உற்று இறுதியில் திருந்தி வாழ்வதாக இவ்வகை நாடகங்கள் அமையும் ?
[A] நந்தனார் சரித்திரம் [B] குறவஞ்சி நாடகம்
[C] பள்ளு நாடகவகை [D] நொண்டி நாடகம்

**83.** பண்டைய "மரப்பாவைக்கூத்து" - அடுத்த நிலை வளர்ச்சி
[A] பொம்மலாட்டம் [B] தோல்பாவைக்கூத்து
[C] நிழற்பாவைக்கூத்து [D] கூத்துக்கலை

**84.** நாடகமேத்தும் நாடகக்கணிகை என்று நாட்டியமாடும் மாதவியைக் குறிப்பிட்டவர் யார் ?
[A] பரிதிமாற்கலைஞர் [B] இளங்கோவடிகள்
[C] சங்கரதாசு சுவாமிகள் [D] பம்மல்சம்மந்தனார்

**85.** இத்தாலி நாட்டைச்சேர்ந்த "வீரமாமுனிவர்" தமிழகம் வந்து காப்பியம் படைத்தப்போது அவருடைய வயது ?
[A] 25 வயது [B] 27 வயது
[C] 29 வயது [D] 30 வயது

**86.** ஓர் ஏக்கர் பரப்பளவில் வளர்ந்துள்ள மரங்கள், பதினெட்டு பேருக்கு எத்தனை ஆண்டுக்கு உயிர்காற்றை தருகிறது ?
[A] 1 ஆண்டுகள் கிடைக்கச் செய்கிறது
[B] 2 ஆண்டுகள் கிடைக்கச் செய்கிறது
[C] 3 ஆண்டுகள் கிடைக்கச் செய்கிறது
[D] 4 ஆண்டுகள் கிடைக்கச் செய்கிறது

**87.** ஆங்கிலேயரிடம் இருந்து சிவகங்கையை வேலுநாச்சியார் எந்த ஆண்டு மீட்டார் ?
[A] 1730
[B] 1772
[C] 1780
[D] 1782

**88.** ஆங்கிலேயருக்கும் - முத்துவடுகநாதருக்கும் இடையே நடைபெற்ற போரில் வடுகநாதர் இறந்தபின் மருது சகோதரர்களுடன் இணைந்து வேலுநாச்சியார் எத்தனை ஆண்டுகள் கழித்து சிவகங்கையை மீட்டார் ?
[A] 5 ஆண்டுகள் [B] 8 ஆண்டுகள்
[C] 3 ஆண்டுகள் [D] 2 ஆண்டுகள்

**89.** திண்டிவனம் அருகில் உள்ள இரட்டனையில் பிறந்தவர்
[A] அசலாம்பிகை [B] ஔவையார்
[C] இராமாமிர்தம் [D] அஞ்சலையம்மாள்

**90.** பறந்தது வண்டா பழமா ? எவ்வகை வாக்கியம்
[A] ஐய வினா [B] வினாவாக்கியம்
[C] தொடர்வாக்கியம் [D]எச்சவினாவாக்கியம்

**91.** தாய்மையன் பிறனை யீன்றபா ரதத்தாய் தாள்மலர் பணிவதே தவமாம் ! அடிகோடிட்ட சொல்லுக்கு எவ்வகை இலக்கணம் தருக ?
[A] உருவகம் [B] உவமைத்தொகை
[C] உம்மைத்தொகை [D] எண்ணும்மை

**92.** 'திரு' என்னும் சொல்லுக்கு தவறான பொருளைத்தேர்க
[A] மேன்மை [B] விளக்கு
[C] இலக்குமி [D] செல்வம்

**93.** "தென்றல்" அசைந்துவரும் தென்தமிழ்நாட்டில் அமைந்துள்ள ஊரைத் தேர்க ?
[A] குடகுமலை [B] திருக்குற்றாலம்
[C] குடவாசல் [D] கொடைக்கானல்

**94.** இராமகிருட்டின பரமஹம்சர் யாரை 'நீ வளைந்த சந்திரனா ? தேய்பிறையா ? என்று வினா மேல் வினாவாக கேட்டறிந்தார் ?
[A] விவேகானந்தர் [B] செல்வி நிவேதிதா
[C] பக்கிம் சந்திர சட்டர்ஜி [D] W.C.பானர்ஜி

**95.** பின்வருவனவற்றுள் எது தவறான இணை ?
I. மக்கள் - கூட்டம் II. வீரர் - படை
III. விறகு - கட்டு IV. சுள்ளி - கற்றை
[A] I [B] II
[C] III, IV [D] எதுவுமில்லை

**96.** கீழ்கண்டவற்றுள் தவறானது எது ?
[A] ஆலங்காடு [B] ஆட்டுமந்தை
[C] பனைமட்டை [D] மாட்டுமந்தை

**97.** ஒரு குழுவினர் தமக்கு மட்டும் புரியும் வகையில், ஒரு பொருளுக்குக் குறிப்பாக வழங்கும் பெயர் ?
[A] இடக்கரடக்கள் [B] குழூஉக்குறி
[C] மங்கலம் [D] மரூவு

**98.** சுயம்வரகாண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்குகாண்டம், எனும் முப்பெரும் காண்டங்களைக் கொண்ட நளனது வரலாற்றை கூறும் நூல் 'நளவெண்பா' - வில் இடம்பெற்றுள்ள பாடல்கள் எண்ணிக்கை ?
[A] நானூற்று ஒன்று [B] நானூற்று முப்பத்தொன்று
[C] நானூற்று ஐம்பது [D] ஆயிரத்திற்கும் மேல்

**99.** "நீலம் என்றால் கறுப்பு; அம்பிகை என்றால் தாய் (ஆய்) என்று தமிழ்பெயராக்கி கருப்பாயி என்று அழைத்தவர் ?
[A] அண்ணாமலையார் [B] பாவாணர்
[C] மு.கதிரேசனார் [D] மறைமலையடிகள்

**100.** "நான் ஒரு முகமதியப் பெண்ணை மணந்து கொண்டேன்"
[A] காளமேகப்புலவர் [B] பரிதிமாற்கலைஞர்
[C] வேங்கடாசலசலனார் [D] மு.கதிரேசனார்

ARIVU TRUST

# ANSWER KEY 8 - TAMIL

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 D | 2 D | 3 A | 4 C | 5 B | 6 C | 7 D | 8 B | 9 D | 10 B | 51 A | 52 A | 53 C | 54 A | 55 D | 56 C | 57 B | 58 A | 59 C | 60 D |
| 11 D | 12 D | 13 C | 14 C | 15 D | 16 A | 17 D | 18 B | 19 A | 20 A | 61 C | 62 B | 63 D | 64 A | 65 A | 66 D | 67 B | 68 A | 69 A | 70 C |
| 21 B | 22 B | 23 D | 24 A | 25 A | 26 B | 27 B | 28 C | 29 B | 30 C | 71 D | 72 A | 73 D | 74 A | 75 C | 76 D | 77 D | 78 A | 79 A | 80 B |
| 31 A | 32 C | 33 B | 34 C | 35 C | 36 D | 37 C | 38 A | 39 C | 40 B | 81 C | 82 D | 83 A | 84 B | 85 D | 86 A | 87 C | 88 B | 89 A | 90 B |
| 41 D | 42 D | 43 A | 44 A | 45 B | 46 A | 47 B | 48 D | 49 C | 50 B | 91 A | 92 B | 93 B | 94 C | 95 D | 96 C | 97 B | 98 B | 99 C | 100 C |

ARIVU TRUST